[31st October 1958

SRI M. KALYANASUNDARAM: Then, I am not pressing my point of order.

SRI S. M. ANNAMALAI: ஸார், வட ஆற்காடு மாவட்டத்தில் ஆறு கல்லூரிகள் இருப்பதாக சொல்லப்பட்டிருக்கிறது. ஆறு கல்லூரிகள் அங்கு இருந்தும் அங்கு மாணவர்கள் இடம் கிடைக்காமல் திண்டாடுகிறார்கள். ஆகவே வேலூரில் இருக்கும் முஸ்லீம் உயர்நிலைப் பள்ளியை கல்லூரியாக மாற்றுவதற்கு சர்க்கார் முன் வருமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இப்போது இருக்கிற கல்லூரிகளுக்கே மாணவர்கள் இல்லை. அப்படியிருக்கும்போது அதிகப்படியாக காலேஜ்களை ஏற்படுத்துவதற்கு சர்க்காருக்கு உத்தேசமில்லை.

Basic and Basic Training Schools

*735 Q.—SRI A. VEDARATHNAM: கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் நடைபெறும் ஆதாரக் கல்வி பயிற்சிப் பள்ளிகள் எத்தனை ?

(ஆ) அவைகளில் நடந்த தொழில் மூலம்—

(1) கடந்த 3 ஆண்டுகளில் ?

(2) இந்த ஆண்டில் அரசாங்கத்திற்குக் கிடைத்த வருமானம் எவ்வளவு ?

(இ) ஆதாரக் கல்விப் பள்ளிகள் எத்தனை ?

(ஈ) அவற்றின்மூலம் மேற்கண்ட 3 ஆண்டுகளில் கிடைத்த தொழில் வருமானம் எவ்வளவு ?

(உ) இந்த எல்லா ஸ்தாபனங்களிலும் விற்பனை இன்றித் தேங்கி இருக்கும் பொருள்களின் மதிப்பென்ன ?

(ஊ) இப் பள்ளிகள் செய்த சமூக சேவையின் விவரம் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM: A statement [a] is placed on the table fo the House.

SRI A. VEDARATHNAM: தலைவர் அவர்களே, ஆதாரப் பள்ளிகளில் படிக்கின்ற மாணவர்களுக்கு அவர்களுடைய சுயதேவைப் பூர்த்தி விஷயமாய் குறிப்பிட்டிருக்கின்ற டயரக்டர் அவர்களுடைய ப்ரொஸீடிங்ஸ்-ஸில் மினிமம் அவர்களுக்கு தேவைப்படுகிற வருமானம் வரவேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவ்விதம் எல்லாப் பள்ளிகளிலும் இந்த மினிமம் வருகிறதா ? இல்லையென்றால் இந்த மினிமம் ஒவ்வொரு பள்ளிகளிலும் வருவதற்கு அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதற்கான புள்ளி விவரங்கள் இப்போது என்னிடம் இல்லை.

SRI R. KRISHNASAMI NAIDU: கனம் சபாநாயகர் அவர்களே, ஆதார ஆரம்பப் பள்ளிகளில் மாணவ மாணவிகள் நூற்கும் நூற்சிட்டங்கள் எல்லாம் அந்தந்த பகுதிகளில் இருக்கும் பயிற்சிப் பள்ளிக் கூடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்விதம் கொடுக்கப்பட்ட நூற் சிட்டங்கள் அங்கே தேங்கி இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். ஆதலால் இவ்விதம் தேங்கிக்கிடந்து அதன் தரம் கெட்டுப்போவதாகவும் தெரிகிறது. இதை உபயோகிப்பதற்கு சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM: இதைப்பற்றி கவனிக்கச்சொல்லுகிறேன்.

[a] Printed as Appendix II on pages 268–269 infra.

31st October 1958]

Sri M. D. THIAGARAJA PILLAI : தலைவர் அவர்களே, ஆதாரப் பள்ளிகளில் அனேகமாக மாணவ மாணவிகள் விவசாயத் தொழிலை முக்கியமாகக் கொண்டிருப்பதால் அந்தந்த பாடசாலையிலுள்ள மாணவ மாணவிகளுக்கு வேண்டிய காய்கறி தான்யங்களை உற்பத்தி செய்து கொள்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு வேண்டிய நிலம் வேண்டும். அதற்கு வேண்டிய மற்ற உதவிகளும் அளிக்கப்பட்டாக வேண்டும். இதிலும் அரசாங்கம் கவனம் செலுத்திக்கொண்டிருக்கிறது.

Sri K. B. S. MANI : ஸார், இப்போது அனேகமாக பல பள்ளிக்கூடங்களில் இட வசதியில்லாமலும், மற்ற வசதிகள் இல்லாமலும் கஷ்டப்பட வேண்டிதிருக்கிறது, ஆகவே இந்த வசதிகளைச் செய்து கொடுப்ப தற்காக சர்க்கார் மூலமாகவே வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, the question relates completely to a different item altogether.

Sri R. SRINIVASA IYER : ஸார், அமைச்சர் அவர்கள் தந்திருக் கிற பதில் வால்யூ ஆப் அன்ஸோல்ட் ஆர்ட்டிகில்ஸ் என்பதில் 2,28,497 ரூபாய் என்று காணப்படுகிறது. இவ்விதம் விற்கப்படாமல் இருப்பதற்கு காரணம் என்ன ?

The Hon. Sri C. SUBRAMANIAM : வாங்குவதற்கு ஆள் இல்லாதது தான் காரணம்.

Sri M. P. PERIASAMI : மோகனூர் ஹைஸ்கூலில் சாகுபடிக்குப் போதுமான அளவு இடம் இருப்பதை விவசாயம் செய்வதற்கு கொடுப் பதற்கு அரசாங்கம் உத்தரவு போடுமா ?

Mr. SPEAKER : மூலக்கேள்வியிலிருந்து இந்த உபகேள்வி எழ வில்லை.

Sri M. R. KANDASWAMI MUDALIYAR : பயிற்சிப் பள்ளிக் கூடங்களில் இருந்து கிடைக்கும் நூல்களை தேசீய வட்டார ஸ்தாபனத்தில் கொடுத்து நெசவு செய்து உபயோகப்படுத்துவதற்கு சர்க்கார் முயற்சி எடுக்குமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இதற்கு இப்போது போடப்பட்டிருக்கிற உத்தரவு எப்படியென்றால் இதில் கிடைக்கின்ற வரு மானத்தைக்கொண்டு, அந்தந்த பள்ளிக்கூடங்களில் மிட் டே மீல்ஸ்க்காக செலவு செய்யவேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

Sri A. VEDARATHNAM : ஆதாரக் கல்வித் திட்டத்தில் மிக முக்கியமான அம்சம் இந்த சுய தேவைப் பூர்த்தி என்பது. இந்த விஷயத்தில் சரியான கவனம் செலுத்தப்படாத காரணத்தினால் பல பள்ளிகள் அந்த லட்சியத்தை அடையவில்லை. அதிலே அதிகாரிகள் அதிக கவனம் செலுத்த அரசாங்கம் உத்தரவு போட முயற்சியெடுத்துக் கொள்ளுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : இது வரையில் அவர்கள் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்களை சர்க்காரே எடுத்துக் கொண்டு கிராண்ட் கொடுக்கும்போது கணக்கில் எடுத்துக் கொண்டு கொடுத்ததால் அவர்கள் அதிக ஊக்கம் செலுத்தாமல் இருந்தார்கள். இப்போது உற் பத்தி ஆகக் கூடிய பொருள்கள் அவர்களுடைய நன்மைக்கே உபயோகப் படும் என்று சொல்லும்போது இந்த நிலைமை அபிவிருத்தியாகும் என்று நினைக்கிறேன்.

[31st October 1958

SRI K. ANBAZHAGAN : தலைவர் அவர்களே, ஆதாரப் பயிற்சி பள்ளிகளில் பயிற்சி பெறும் ஆசியர்களுக்கு தொழில் கல்வியளித்து பின்னர் அவர்கள் ஆசிரியர்களாகும்போது தொழில் மூலம் கல்வி கற்பிக்க அவர்களுக்கு பயிற்சி ஏதேனும் அளிக்கப்படுகிறதா ? தொழில் கல்வி மூலம் கல்வி கற்பிப்பதைப் பற்றி கவனம் செலுத்தப்படுகிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் பயிற்சி தான் அங்கு கொடுக்கப்படுகிறது. கனம் அன்பழகன் அவர்களே அந்தப் பயிற்சி நிலயங்களுக்குப் போய் நான்கு நாட்கள் இருந்து அந்தப் பயிற்சி நிலையங்கள் எப்படி வேலை செய்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRIMATHI DR. T. S. SOUNDARAM RAMACHANDRAN : இந்தத் தொழில்கள் மூலமாக வரக்கூடிய வருமானத்தை மதியச் சாப்பாட்டுக்குப் பயன் படுத்தலாம் என்று சர்க்கார் அங்கிகாரம் கொடுத்திருக்கிறார்கள். ஒரு ஹாஸ்டலில் இருந்து படிப்பது முக்கிய குறிக்கோளாக உள்ள ஹாஸ்டல் விஷயத்தில், சாப்பாட்டுக்கு உபயோகப்படுத்தலாம் என்று சர்க்கார் உத்திரவு போடுவார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்போது வரும் வருவாய் மதிய உணவுக்குப் போதுமான அளவுள்ளதாகத்தான் இருக்கும் என்று கருதி இந்த உத்திரவை அரசாங்கம் போட்டிருக்கிறது. அதற்கு மேல் வருவாய் வந்தால் ஹாஸ்டலிலே உபயோகப்படுத்தலாம் என்ற திருத்த உத்தரவு போடும் விஷயம் பரிசீலனையில் இருக்கிறது.

Medical Colleges

* 736 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) (1) சென்னை வைத்தியக் கல்லூரி,

(2) மதுரை வைத்தியக் கல்லூரி,

(3) ஸ்டான்லி வைத்தியக் கல்லூரி,

(4) தஞ்சை வைத்தியக் கல்லூரி,

ஆகியவைகளிலே ஒவ்வொரு கல்லூரியிலும் பூர்வாங்க வைத்திய வகுப்பிலே 1958-ம் ஆண்டில் எத்தனை மாணவர்களும், மாணவிகளும் சேர்க்கப்பட்டார்கள் ?

(ஆ) இவர்களுள், ஹரிஜன மாணவர்களும் மாணவிகளும் எத்தனை பேர் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) Among the four Government Medical Colleges, the Pre-medical course is conducted only in the Madras Medical College, Madras, wherein 96 men students have been admitted this year. The other selected students have been admitted in the various Arts Colleges in the State. The 94 women students selected for the Pre-medical course have been admitted in the Queen Mary's College, Madras, and the Holy Cross College, Tiruchirappalli.

(*b*) Thirty-two men and four women.

SRI A. A. RASHEED : May I know from the Hon. Minister whether the district-war quota fixed for admission into these colleges is based on the population of the district or on the basic needs of the district?

THE HON. SRI M. A. MANICKAVELU : Sir, the district-war quota is given on the basis of population.